# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | **:-** | **EA.No.02/2023 in EP.97/2021** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | **:-** | **வா.சா- 04 ( PW- 04 )** |
| **பெயர்** | **:-** | **வளர்மதி** |
| **தேதி** | **:-** | **18-11-2025** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

நான் 12-ஆம் வகுப்பு படித்துள்ளேன். முதல்விசாரணைக்கான ஆணையுறுதி பத்திரத்தில் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளன என்று எனக்குத் தெரியும். கோகுலம் Chit நிறுவனத்தினர் என்ன வழக்கு தொடுத்தனர் என்று எனக்குத் தெரியாது. இறந்துபோன ஜெயா என்ன தொழில் செய்தார் என்றால் அவர் தொழில் எதுவும் செய்யவில்லை. அவர் ஸ்டார்ச் வாங்கி விற்கும் தொழில் செய்தார் என்றால் இல்லை. ஜெயா சுய சம்பாத்தியத்தை கொண்டுதான் மனுச் சொத்தை சொந்தமாக கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. பரமசிவமும் ஜெயாவும் சேர்ந்துதான் மனுச் சொத்தை வாங்கினார்கள் என்றால் சரியல்ல. ஜெயாவின் மாமனார் வீட்டில் பெரியவர் என்பதால் கிரயத்திற்கு அவர் சென்றார் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.